**வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, கூடுதல் முதன்மை கல்வி அலுவலர்அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு க.முனிசாமி எம்,ஏ.,எம்.எஸ்.சி.,எம்.பி.ஏ.,பி.எட்.,எம்.பில்.,**

**ந.க.எண். 2616/ஆ2/2022 நாள்: .06.2022**

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம் – 2022–23–ம் கல்வி ஆண்டு – "எண்ணும் எழுத்தும்" சார்ந்து வட்டார அளவில் பயிற்சி வழங்குதல் – தெளிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை:** 1.இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2411/ஈ2/2021 நாள்:16.05.2021.
2.இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2411/ஈ2/2021 நாள்:30.05.2021.

***********

பார்வையில் காணும் கடிதத்தில், கொரோனா பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியை போக்க எண்ணும் எழுத்தும் என்ற மாபெரும் இயக்கம் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. இவ்வியக்கம் 2025 ஆம் கல்வியாண்டிற்குள் 1 முதல் 3 ஆம் வகுப்பு பயிலும் 8 வயதிற்குட்பட்ட அனைத்து மாணவர்களும் எண்ணறிவையும் எழுத்தறிவையும் பெற்றிருக்க வேண்டும் என்ற தொலை நோக்கினை கொண்டுள்ளது. மேலும், இவ்வியக்கம் 2022–2023 ஆம் கல்வியாண்டில் தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் பயிற்சி பெற்ற முதன்மை கருத்தாளர்களை கொண்டு மாவட்ட அளவில் கருத்தாளர்களுக்கான பயிற்சி வாணி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி காட்பாடியில் 01.06.2022 மற்றும் 02.06.2022 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்று வருகிறது.

மாவட்ட அளவில் பயிற்சி பெற்ற கருத்தாளர்களை கொண்டு ஒன்றிய அளவில் பயிற்சி வழங்கப்பட உள்ளது. பயிற்சி நடைபெறும் மையத்தின் Hi-Tech Lab நன்முறையில் வைத்திருத்தல் வேண்டும். In-charge ஆசிரியர் பயிற்சி முடியும் வரை கருத்தாளர்களுடன் ஒருங்கிணைந்து பயிற்சியை சிறப்பான முறையில் நடைபெற அனைத்து முன் ஏற்பாடுகளை செய்து தர வேண்டும்.

பயிற்சி நடைபெறும் நாள் மற்றும் இடம் விவரத்தினை தனித்தனியாக அனைத்து ஆசிரியர்களுக்கும் தொலைப்பேசி வாயிலாக முன்கூட்டியே வட்டாரக் கல்வி அலுவலர்கள் தெரிவிக்கப்பட வேண்டும். மேற்பார்வையாளர்கள் (பொ) பயிற்சி நடைபெறும் ஒவ்வொரு அறைக்கும் ஒரு ஆசிரியர் பயிற்றுநரை பொறுப்பாளராக நியமித்து, அதன் விவரத்தை மாவட்டத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

மேலும், அனைத்து அறைகளில் நன்கு வெளிச்சம், காற்றோட்டம், மின்விசிறி, ஒளி விளக்குகள், LCD, Projector நன்முறையில் இருத்தல் வேண்டும். ஆசிரியர்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தி தர வேண்டும். கழிப்பறை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் மற்றும் தண்ணீர் வசதியுடனும் நல்ல முறையில் இருத்தல் வேண்டும் என பயிற்சி நடைபெறும் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் அந்தந்த பள்ளி பொறுப்பு ஆசிரியர் பயிற்றுநர்கள் தினந்தோறும் பயிற்சி நடைபெறும் மையத்தில் அனைத்து ஆசிரியர்களும் பயிற்சியில் கலந்துக்கொள்வதை உறுதி செய்திடல் வேண்டும்.

த.பி.பா...

அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள் பயிற்சி நடைபெறும் ஐந்து நாட்களும் பயிற்சியில் பங்கேற்பாளர்களாக கலந்துக்கொண்டு, பயிற்சி செவ்வனே நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

பயிற்சி மையங்களை மாவட்டக் கல்வி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள், குறு வள மைய தலைமை ஆசிரியர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் (பொ), மாவட்ட/ கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர்கள் தொடர் கண்காணிப்பு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

| S.No | Name of the Block | Total No. Of Teachers Handling Classes 1 to 3 | No. Of Batches for In-Service Training of Teachers Handling Classes 1 to 3 (40 Per Batch) | Training Venue |
|---|---|---|---|---|
| 1 | ANAICUT | **169** | **4** | **GBHSS ANAICUT** |
| 2 | GUDIYATHAM | **160** | **4** | **GGHSS NADUPET** |
| 3 | GUDIYATHAM | **116** | **3** | **GGHSS NELLOREPET** |
| 4 | K.V.KUPPAM | **118** | **3** | **GBHSS K.V.KUPPAM** |
| 5 | KANIYAMBADI | **105** | **3** | **GHSS KANIYAMBADI** |
| 6 | KATPADI | **192** | **5** | **GBHSS KATPADI** |
| 7 | PERNAMBUT | **115** | **3** | **GGHSS PERNAMBUT** |
| 8 | VELLORE RURAL | **113** | **3** | **GHSS KONAVATTAM** |
| 9 | VELLORE URBAN | **129** | **3** | **MUSLIM GOVT. HSS VELLORE** |
| | **Total** | **1217** | **31** | |

**ஒம்.xxxxxx**
**கூடுதல் முதன்மை கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
**வேலூர் மாவட்டம்.**

**இணைப்பு:**பயிற்சி மைய வாரியாக ஆசிரியர்கள் விவரம்.

**பெறுநர்:**

1. மாவட்ட கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்.
2. சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் (பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யும் பொருட்டு)
3. அனைத்து வட்டார கல்வி அலுவலர்கள்.
4. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ).

**நகல்:**

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.